முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 744**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.10.2021,செவ்வாய்கிழமை

1. மகா சக்தியாய் வந்த அரங்கனே
மண்ணுலகை காக்க வந்த தேசிகனே
யுகமாற்றம் செய்தே தீருவேன் என
உயர்வான என் அவதாரமாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென என் சக்தியாய் வாழும்
வள்ளலே வாழுகின்ற ஞானியே
3. ஞானியே உன் தர்மம் உலகம் ஏற்கப்பட
ஞான உலகமாக மாற்றம் பெறும்
ஞானியே உன் கொள்கை ஏற்கப்பட
ஞானவான்கள் படை உலகமெங்கும் பெருகும்
4. பெருகவே அரங்கன் நீயே உலகை
பிசகில்லாத பிரம்ம சக்திகொண்டு மாற்ற வந்த
தரணியின் சிறந்த மகா ஞானி
தவசியும் தர்மனும் நீயே அப்பா
5. அப்பனே உன்னை பின்பற்றி வரும் மக்கள் மூலமே
அகிலத்தில் அற்புதத்தை யான் நடத்துவேன்
மகிழ மக்களுக்கு தர்ம ஞான ஆட்சி
மகான் அரங்கன் உன் தலைமையில் உருவாக்குவேன்
6. ஆக்கமுடன் இந்த அற்புதத்தை யானே
அகிலத்தில் அரங்கனை கொண்டு நடத்தி வர
ஊக்கமோடு உலகோர் ஓங்காரக்குடில் நோக்கியும்
உயர்வான தர்மவான் அரங்கன் வழி நோக்கியும்
7. நோக்கியே மக்கள் வருகவருக
நிலவுலகம் ஞான பலம் பெற்று இனிதே
ஆக்கமுடன் அரங்கன் வழி பிரம்மத்தை உணர்ந்து
அவனியில் ஆறுமுகன் என் தயவுபட

8. தயவுபட பாதுகாப்பு மிக்க
தரணியாக உலகம் மாற்றம் பெற்று
பெற்றுமே அரங்கனால் அற்புதத்தை பிசகின்றி ஆறுமுகன் யான் நடத்துவேன்
ஆற்றல்மிக்க தொண்டர்களை உருவாக்கி அகிலத்தை ஞானயுகமாக மாற்றம் செய்து மகிழ்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–